புகாரின்படி, மத்திய குற்றப்பிரிவு போலீசார் நடிகை கவுதமி புகாரின் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அதேநேரம், நடிகை கவுதமி அளித்த புகாரின் மீது திருவண்ணாமலை மாவட்ட போலீசார் கடந்த செப்டம்பர் மாதம் அழகப்பன் மற்றும் அவரது மனைவி நாச்சல் அழகப்பனிடம் விசாரணை நடத்தினர். அப்போது சில ஆவணங்களை எடுத்து வருவதாக கூறி சென்றவர்கள் மீண்டும் விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகிவிட்டனர். இதையடுத்து சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் சார்பில் வழக்கு தொடர்பாக நேரில் ஆஜராகும்படி 6 முறை அழகப்பனுக்கு சம்மன் அனுப்பப்பட்டது. ஆனால் ஒரு சம்மனுக்கும் அவர் தரப்பில் இருந்து பதில் வரவில்லை. அதை தொடர்ந்து மத்திய குற்றப்பிரிவு போலீசார் காரைக்குடி அருகே உள்ள கோட்டையூரில் உள்ள அழகப்பனுக்கு சொந்தமான வீடு உள்ளிட்ட 5 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர். இந்த சோதனையில் சொத்து பத்திரங்கள் பல சிக்கியதாக கூறப்படுகிறது. அதேநேரம் கோட்டையூரில் உள்ள பங்களா வீட்டில் உள்ள 11 அறைகளையும் மத்திய குற்றப்பிரிவு போலீசார் சீல் வைத்தனர். இந்நிலையில் நடிகை கவுதமிக்கு சொந்தமான ₹25 கோடி மதிப்புள்ள சொத்துகளை அபகரித்த அழகப்பன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் மோசடிக்கு உடந்தையாக உள்ளவர்களை பிடிக்க மத்திய குற்றப்பிரிவு சார்பில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. 3 தனிப்படைகளும் பல்வேறு கோணங்களில் அழகப்பனை பிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அதேநேரம், அழகப்பன் மகன் சிவா லண்டனில் வசித்து வருவதாக கூறப்படுகிறது. இதனால் அவர் லண்டனுக்கு தப்பி சென்று இருக்க வாய்ப்பு உள்ளதாக சந்தேகிக்கின்றனர். அழகப்பன் தொடர்பான விவரங்களை சுங்கத்துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வெளிநாட்டிற்கு தப்பி சென்றாரா என்ற கோணத்தில் மத்திய குற்றப்பிரிவு போலீசார் விசாரிக்கின்றனர்.

காலி பணியிடத்துக்கு பணி நியமன ஆணை

▶ சென்னை கோயம்பேடு சிஎம்டிஏ அலுவலகத்தில் நேற்று நடந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகளை அமைச்சர் முத்துசாமி வழங்கினார்.

வேஷம் போடும் பாஜ-அதிமுக கள்ளக்கூட்டணியை வீடு வீடாக சென்று அம்பலப்படுத்துங்கள்

திமுக தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, நவ. 3: திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

திமுக 6வது முறையாக ஆட்சி செய்கின்ற வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுகிற வகையில் நாள்தோறும் சாதனைத் திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் பின்பற்றக்கூடிய வகையில் நம்முடைய அரசின் திட்டங்கள் மக்களுக்குப் பயனளித்து வருகின்றன.

அதேநேரத்தில், மாநிலங்களின் வளர்ச்சியை விரும்பாத, மாநிலங்களின் உரிமைகளை மதிக்காத, மாநிலங்களுக்குப் போதிய நிதியளிக்காத, மாநிலங்கள் என்ற கட்டமைப்பே இருக்கக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டவர்களின் ஆட்சி இந்திய ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இது குறித்து, 'ஸ்பீக்கிங் பார் இந்தியா' என்ற நிகழ்வின் மூன்றாவது பகுதியில் பேசியிருக்கிறேன். கலைஞர் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மாநில சுயாட்சிக் கொள்கையையும் அதன் இன்றைய தேவையையும் அந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறேன். தமிழிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் வெளியாகியுள்ள அந்த உரையை உடன்பிறப்புகளாகிய நீங்கள் கேட்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.

இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிரான மதவாதக் கொள்கை கொண்ட ஆட்சியை அகற்றிட இந்தியா கூட்டணி உருவாகி, நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. அதில், திமுக பங்கு மகத்தானது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் முழுமையான வெற்றியை இந்தியா கூட்டணி பெற்றிட, தமிழ்நாடு, புதுவை உள்ளடக்கிய 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கான கட்டமைப்பை இந்தியா கூட்டணி உருவாவதற்கு முன்பே நாம் தொடங்கிவிட்டோம்.

கடந்த மார்ச் 22ம் நாள் நடந்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் ஒவ்வொரு வாக்குசாவடிக்கும் 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என பூத் கமிட்டி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு பூத் கமிட்டியிலும் மகளிர், இளைஞர், சமூக வலைத்தளச் செயல்பாட்டாளர்கள் இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு முழுவதுமுள்ள வாக்குச்சாவடிகளுக்கு பூத் கமிட்டிகள் அமைக்கப்பட்டு, அதில் பங்கேற்றுள்ள உறுப்பினர்களின் விவரங்கள் சரியாக இருக்கிறதா என்பதும் உறுதி செய்யப்பட்டது. அதே மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில், திமுகவில் ஏற்கனவே உள்ள ஒரு கோடி உறுப்பினர்களுடன் புதிதாக ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்கிற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, ஒரு தொகுதிக்கு எத்தனை உறுப்பினர்கள் என்ற விவரமும் மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டு, அதன்படி புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு நிறைவடைந்துள்ளது.

புதிய உறுப்பினர்களின் வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட ஆதாரங்களும் சரிபார்க்கப்பட்டுள்ளன. நவம்பர் 7ம் நாள் முதல் திமுகவின் புதிய உறுப்பினர்களுக்கான அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன. அதுபோலவே, பூத் கமிட்டிக்குரிய பாக முகவர்களின் கூட்டம் மண்டலவாரியாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நவம்பர் 5ம்தேதி அன்று சென்னை மண்டலத்திற்கான பாக முகவர்களுக்குரிய பயிற்சிக் கூட்டம் திருவள்ளூரில் நடைபெறவிருக்கிறது.

மாநாடுகள் போல நடைபெற்ற ஒவ்வொரு கூட்டத்திலும், பாக முகவர்களும் பூத் கமிட்டி உறுப்பினர்களும் எத்தகைய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் எப்படி செயல்படவேண்டும் என்பதையும், திமுக சார்பிலான செயலிகளைப் பயன்படுத்தும் முறையையும் தெளிவாக விளக்கி, ஒவ்வொரு வாக்கையும் சிந்தாமல் சிதறாமல் திமுக அணிக்குக் கொண்டு வருவதற்குரிய வகையில் பயிற்சிகள் அமைந்தன. தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் திமுக சார்பில் தொகுதிப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் பணியை நிறைவேற்றியுள்ளனர்.

திமுகவின் மூத்த அமைச்சர்களும் இதே போல ஆய்வுப் பணியை மேற்கொண்டு, இளைய அமைச்சர்களுக்கும் வழிகாட்டுகிறார்கள். திமுகவின் இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதியும் தமிழ்நாடு முழுவதும் திமுக நிகழ்வுகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்பதுடன், திமுக அரசின் திட்டங்கள் எந்தளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை ஆய்வு செய்யும் பணிகளிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருவதை நான் செல்லும் மாவட்டங்களில் என்னைச் சந்திக்கும் மூத்த அமைச்சர்களும் மாவட்ட செயலாளர்களும் தெரிவித்து வருகின்றனர்.

திமுகவில் எந்தவிதப் பிரதிபலனும் எதிர்பாராமல் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞருக்காகவும், கருப்பு-சிவப்பு கொடியின் நிறமே தங்கள் குருதி நிறம் என்ற உணர்வுடனும் தங்கள் இளமை வாழ்வை இயக்கத்திற்கு அர்ப்பணித்து, இன்று மூத்த உறுப்பினர்களாகத் திகழ்பவர்களுக்கு மாவட்டந்தோறும் பொற்கிழி வழங்குகிறார் தம்பி உதயநிதி. நீ அவரவர் பகுதியில் உள்ள பொது மக்களிடமும் மாணவர்களிடமும் நீங்கள் கையெழுத்தைப் பெறவேண்டும். 50 லட்சம் என நிர்ணயித்திருக்கின்ற இலக்கையும் தாண்டி உங்களுடைய பங்களிப்பு இருக்க வேண்டும். குறிப்பாக மருத்துவக் கனவு சிதைகின்ற அச்சத்தில் உள்ள மாணவர்கள், நீட் தேர்வினால் பெரும் அவதிக்கு உள்ளாகும் பெற்றோர் ஆகியோரிடம் கையெழுத்து பெற வேண்டும்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் புரட்சித் திட்டம், பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லாத விடியல் பயணத் திட்டம், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட மகத்தான திட்டங்களின் பயன்கள் மக்களிடம் சரியாகப் போய்ச் சேரவேண்டும். அது பற்றி அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசின் திட்டங்கள் எவருக்கேனும் கிடைக்காமல் இருந்தால், அவர்கள் தகுதியான விண்ணப்பதாரர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு அரசின் திட்டங்களின் பயன்கள் கிடைக்கும் படி செய்திட வேண்டியது தொகுதிக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய, நகரச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

நாம் உழைப்பது நம் இயக்கத்தின் வெற்றிக்காக மட்டுமல்ல, நாட்டு மக்களின் விடுதலைக்காக. ஏழரை லட்சம் கோடி ஊழல் செய்ததாக சி.ஏ.ஜி.யால் குற்றம்சாட்டப்பட்டுள்ள பாஜகவின் கைகளிலிருந்து காப்பாற்றும் வகையிலும், அவர்களுடன் கூட்டு சேர்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் எண்ணற்ற துரோகங்கள் செய்துவிட்டு, இப்போது கூட்டணி முறிந்துவிட்டதாகவேடம்போடும் அதிமுகவின் கள்ளக்கூட்டணியை அம்பலப்படுத்தும் வகையிலும் வீடு வீடாக உங்கள் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாற்பதும் நமதே, நாடும் நமதே என்று கடந்த 2022ம் ஆண்டு விருதுநகரில் நடந்த முப்பெரும் விழாவில் என் முழக்கத்தை முன்வைத்தேன். அதைச் செயல்படுத்தும் வியூகங்கள் வலுப்பெற்று, இன்று இந்தியா முழுவதும் பாஜ அரசுக்கு எதிரான அலை கடுமையாக வீசிக் கொண்டிருக்கிறது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா நம் வசம்தான். ஜனநாயகம் காப்பதில் உறுதியாக உள்ள தோழமை சக்திகளுடன் இணைந்து மகத்தான வெற்றியைப் பெறுவோம். அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடியாகக் களம் காணட்டும் திமுக படை. வெற்றியை உறுதி செய்யும் உழைப்பை வழங்கட்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தேசியவாத காங். எம்பி தகுதி நீக்கம் ரத்து

புதுடெல்லி, நவ.3: கொலை முயற்சி வழக்கில் லட்சத்தீவு தேசியவாத காங்கிரஸ் எம்பி முகமது பைசலுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டதால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதை எதிர்த்து தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. இதன் பின் மீண்டும் எம்பியானார். அப்பீல் மனுவை விசாரித்த கேரள உயர்நீதிமன்றம், அவர் மீதான தண்டனையை ரத்து செய்ய மறுத்தது. அக்டோபர் 4ம் தேதி மீண்டும் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதற்கிடையே, பைசல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் கேரள உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதித்தது.

அவருக்கு எதிரான தகுதி நீக்க உத்தரவு ரத்து செய்யப்படுவதாக மக்களவை செயலகம் நேற்று அறிவித்தது.

तमिழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை

விழுப்புரம் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.40/2023–2024/தவஅ/நாள்–30.10.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி.2023–24–ன் கீழ் அரியலூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில்** (VPM-007) ஒரு பணிக்கும், **கடலூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில்** (VPM-035) ஒரு பணிக்கும், மற்றும் **விழுப்புரம் (நெ) க(ம)ப, கோட்டத்தில்** (VPM-058) ஒரு பணிக்கும், இணையவழியில் இரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **21.11.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரங்கள், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **03.11.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், விழுப்புரம்

செ.ம.தொ.இ/5863/ஒப்பந்தப்புள்ளி/2023

SPORTS DEVELOPMENT AUTHORITY OF TAMIL NADU
JAWAHARLAL NEHRU STADIUM, RAJA MUTHIAH ROAD, PERIYAMET, CHENNAI – 3

e-Tender ref no. 876/SI1/2022, **Notice inviting e-Tender** **Date:03.11.2023**

e-bids are invited for the following work by Member Secretary, Sports Development Authority of Tamil Nadu, Jawaharlal Nehru Stadium, Raja Muthiah Road, Periyamet, Chennai-600 003 under two cover system.

Name of work	Construction of District Sports Complex at Chengalpattu District. (Two cover system) EMD: Rs.7,35,000/-
Pre-bid Meeting on	10.11.2023 at 12.30 P.M in the O/o The Member Secretary, Sports Development Authority of Tamil Nadu, Jawaharlal Nehru Stadium, Raja Muthiah Road, Periyamet, Chennai – 600003.
Last date for submission of online tender	05.12.2023 at 4.00 P.M
Date of opening of technical bids	06.12.2023 at 4.00 P.M
Period of Contract	450 Days from the date of handing over the site

Tenders available at **https://tntenders.gov.in** All further informations / notices shall be published in e-procurement portal only.

(Sd/-)
Member Secretary, SDAT

DIPR/5869/TENDER/2023

பூலுவபட்டி பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

ந.க.எண்–78/2023 நாள்–02.11.2023

மறு ஏல விளம்பரம்

கோயம்புத்தூர் மாவட்டம் பூலுவபட்டி பேரூராட்சிக்கு சொந்தமான சிறுவாணி மெயின் ரோட்டில் சந்தை முன்பு அமைந்துள்ள வணிக வளாகத்தில் முதல் தளத்தில் கடை எண் 15 முதல் 20 வரை உள்ள கடைகளுக்கு கடைகள் ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் வரை அனுபவித்துக்கொள்ள மறு ஏலம் வருகின்ற 16.11.2023 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு பூலுவபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ பகிரங்கமாய் ஏலம் விடப்படும் என்பதை பொது மக்களுக்கு இந்த விளம்பரம் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஏல நேரம்–காலை 11.00 மணி

அட்டவணை

வ எண்.	ஏலம் விடப்படும் இனங்களின் விபரம்	ஏலம் கேட்கும் முன் செலுத்த வேண்டிய ஏல முன் வைப்புத் தொகை (டேவணி தொகை)	ஏலம் கேட்கும் முன்சொத்து மதிப்பு சான்று	சொத்து மதிப்பு சான்று வில்லங்க சான்று கொடுக்காதவர்கள் அதற்காக செலுத்த வேண்டிய பொறுப்பு தொகை
(1)	(2)	(3)	(4)	(5)
	2வது ஏல அறிவிப்பு			
1.	பூலுவபட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 பூலுவபட்டி சந்தை முன்பு புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகள் முதல் தளத்தில் கடை எண் 15 முதல் கடை எண் 20 வரை உள்ள கடைகள் ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு மட்டும் ஏல பாத்திய உரிமம்.	ரூ.1,00,000/- (கடை ஒன்றுக்கு)	ரூ.3,00,000/- (கடை ஒன்றுக்கு)	ரூ.1,00,000/- (கடை ஒன்றுக்கு)

ஏல நிபந்தனைகள்

1) அலுவலக விளம்பரப் பலகையில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.
2) ஏலம் தொடர்பான இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்) திருமதி.**செ.ராஜலட்சுமி**
தலைவர்
பூலுவபட்டி பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

(ஒம்) திருமதி.**எம்.மாலா**
செயல் அலுவலர்
பூலுவபட்டி பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்

வெ.ஆ.எண்.588/2023/செ.ம.தொ.அ/கோவை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம் (வரையறுக்கப்பட்டது) பதிவு எண்.XC-162
எண்.9, டேவிட்சன் தெரு, சென்னை - 600 001

42 வது ஆண்டு பொதுப் பேரவைக் கூட்ட அறிவிப்பு

அன்புடையீர், வணக்கம்.

நமது கூட்டுறவு சங்கத்தின் **42வது ஆண்டு பொதுப் பேரவைக் கூட்டம் 10.11.2023ம்** தேதி வெள்ளிக்கிழமை அன்று காலை **10.00** மணியளவில் இலக்கம் 9, டேவிட்சன் தெரு, சென்னை - 1, முகவரியில் அமைந்துள்ள சங்க வளாகத்தில் நடைபெற உள்ளது. எனவே, சங்க உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

2022-2023ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட வரவு-செலவு அறிக்கை, ஆண்டறிக்கை மற்றும் தீர்மானங்கள் ஆகியவற்றைப் பேரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பித்தல்.

1. 2022 - 2023ம் ஆண்டு தணிக்கை அறிக்கையை அங்கீகரித்தல்.
2. 2022 - 2023ம் ஆண்டுக்கான நிகர இலாபத்தை பங்கீடு செய்தல்
3. 2024-2025ம் ஆண்டிற்கான உத்தேச வரவு-செலவு திட்டத்தை அங்கீகரித்தல்
4. சங்கத்தில் இறந்த உறுப்பினர்களின் கடன் நிலுவைத் தொகைக்கு இறந்த நாள் வரை வட்டி கணக்கீடு செய்து கணக்கு முடித்தல் தொடர்பாக.
5. சங்க துணை விதி எண். 64ன் கீழ் இறந்த உறுப்பினர்களின் கடன் நிலுவை தொகையினை பிணையாளர் நிவாரண நிதியிலிருந்து நேர் செய்து கணக்கு முடித்தல் தொடர்பாக.
6. கூட்டுறவு சங்கங்களின் 7வது ஊதியக்குழுவில் பரிந்துரைத்தப்படி சங்க பணியாளர்களின் பணிநிலைத் திறனில் திருத்தம் மேற்கொள்ள முன்மொழிவு அனுப்புவது- தொடர்பாக.
7. சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கு 0.5% வட்டி விகிதம் குறைப்பது தொடர்பாக.
8. செயலாட்சியர் அனுமதியுடன் கொண்டு வரும் இதர தீர்மானங்கள்.

திரு.சு.சத்தியானந்தம்
செயலாளர் (பொ)

திருமதி. க.மனோன்மணி
கூட்டுறவு சார் பதிவாளர் / செயலாட்சியர்

நாள் : 03.11.2023
சென்னை - 600001
செமதொஇ/1264/வரைகலை/2023

भारत संचार निगम लिमिटेड
(भारत सरकार का उद्यम)
BHARAT SANCHAR NIGAM LIMITED
(A Govt. of India Enterprise)

REQUEST FOR PROPOSAL / प्रस्ताव के लिए अनुरोध

RFP NO. BSNL-CO/LM/AUCTION/2023-24/25 to 44

BSNL invites bids for sale of twenty land parcels through e-tender followed by e-auction at various locations in Andhra Pradesh, Kerala, Madhya Pradesh, Punjab, Tamil Nadu, Puducherry and Uttar Pradesh.

The detailed tender / RFP documents are available on the website of MSTC **https://www.mstcecommerce.com/auctionhome/propertysale/index.jsp** (under 'Notifications' link). The RFP and other documents can also be seen on website of BSNL at **https://www.bsnl.co.in/opencms/bsnl/BSNL/virtual_dataroom**

The last date of submission of online bids is upto **15:00 hrs on 29.11.2023.**

Executive Engineer (Civil), ABM Division
कार्यकारी अभियंता (सिविल), ए.बी.एम प्रभाग
BSNL, Tamilnadu Circle, Chennai - 6
बी.एस.एन.एल, तमिलनाडु परिमंडल, चेन्नई–**6**

(Mob: 9486100871, 9486101441, Email: pcecivilch@gmail.com)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி) - (இரண்டு உறை) - இனம் வாரியாக மின்னணு ஒப்பந்தம் முறையில்.

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண் :	**02/ கோ. மின் தணிக்கை/** உ.பொ-4/ஒ.நி./2023, நாள்: 02.11.2023.
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை, தமிழ்நாடு.
ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம்	**06.11.2023 முதல் 23.11.2023 -15.00 மணி வரை.**
ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை	Online முறையில் **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலமாக.
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக் கூட்டம்	**09.11.2023 அன்று முற்பகல் – 11.00 மணிக்கு.** இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை, தமிழ்நாடு அவர்களின் அலுவலகத்தில்.
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	**23.11.2023 அன்று 15.00 மணிக்குள்** மின்னணு ஒப்பந்தம் முறையில் மின்னணு முறையில் ஒப்பமிடப்பட்டு **https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலமாக.
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	**24.11.2023 அன்று 15.30 மணிக்கு** இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.), த.கு.வ.வா, சென்னை, தமிழ்நாடு அவர்களின் அலுவலகத்தில் மின்னணு முறையில் திறக்கப்படும்.

ஒ.கே. எண்.	திட்டத்தின் பெயர்	முன்வைப்பு தொகை
1.	தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் 20 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் உள்ள 50 குதிரைதிறனுக்கு மேல் திறன் கொண்ட 269 மின் மோட்டார்களின் செயல்பாட்டை மதிப்பிடு செய்து, மின் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துவதற்காக, அவற்றில் மின் தணிக்கை மேற்கொண்டு, அதன் திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஏல ஆவணங்கள் தயாரித்தல் உள்ளிட்டவைக்கான ஆலோசனை சேவையை ஈடுபடுத்துதல். (இரண்டு மாதங்கள்) - (இரண்டாம் அழைப்பு)	ரூ. 50,000/-

செ.ம.தொ.இ/ 5874 /ஒப்பந்தப்புள்ளி/2023

இணை தலைமைப் பொறியாளர் (ஒ.நி.),
த.கு.வ.வா, சென்னை-05.

தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்

முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: டி.சி. எண் 14/2074-7, முத்தூட் மையம், புன்னேன் சாலை, திருவனந்தபுரம் - 695 034, CIN எண்-U65922KL2010PLC025624. கார்ப்பரேட் அலுவலகம்: 12/A 01, 13வது தளம், பரினீ கிரெஸ்செண்ஸோ, மனை எண் C38 & C39, பாந்த்ரா குர்லா வளாகம்-G பிளாக் (கிழக்கு), மும்பை-400051 தொலைபேசி எண்: 022-62728517, அதிகாரப்பூர்வ அதிகாரி மின்னஞ்சல் முகவரி: authorised.officer@muthoot.com, தொடர்பு நபர்:- பிரஜேஷ் குமார் - 9895386900, ஜோபி ஜோசப் ஜோஸ் - 9995755655.

பொது அறிவிப்பு - சொத்து ஏலம் மற்றும் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் & கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இல் அடங்கிய தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் (இனிமேல் "நிறுவனம்" ஆக குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிட்டச் சொத்துகள் (இனிமேல் "கடனீட்டுச் சொத்து" ஆக குறிப்பிடப்படும்) மேலும் கீழ்க்குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு (இனிமேல் "கடன்தாரர்கள்" ஆக குறிப்பிடப்படுவர்) வழங்கிய வீட்டுக் கடன் வசதிகளுக்கான கடனீடாக வைத்திருப்பதை சுவாதீனம் செய்துள்ளார் மேற்கொண்டு கடன்தாரர்கள் மூலமான மிகைபாக்கியின் இறுதி பணப்பட்டுவாடா வரையான அதற்குரிய மேற்கொண்டு வட்டி மற்றும் செலவுகளுடன் கீழ்க்காணும் தொகைக்குரிய கடனீட்டுக் கடன் தொகை நிமித்தம் பொதுமக்களிமிருந்து முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", "உள்ளது எதுவோ அது" மற்றும் "உதவிசாரா" அடிப்படை/நிபந்தனைகளில் கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர்/கள் பெயர் & க.க.எ.	சுவாதீனம் வகை & நாள்	மொத்த நிலுவைத்தொகை (₹) பொருந்தும் எதிர்கால வட்டி	நிர்ணய விலை (₹)	முன்வைப்புத் தொகை (₹)
1	க.க.எ. எண்: 17110086297 & 17110107608 1. M. அஜு முருகானந்தன் (எ) அஜு முருகானந்தன் 2. லதா புகலேந்திரன் 3. ஜோதி முருகானந்தன் 4. S. முருகானந்தன்	ஆக்கப்பூர்வ சுவாதீனம்- 22-பிப்ரவரி-2023	31-அக்டோபர்-2023 தேதியன்று ₹.23,60,478.52/- & ₹.25,31,488.94/-	ரூ. 1,10,00,000/-	ரூ. 11,00,000/-

பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்) /அசையா சொத்துக்கள் (கள்) பற்றிய விளக்கம் – கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், காந்திபுரம் துணைப் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுக்கா, கணபதி கிராமத்தில், SF எண். 294/1 பகுதி ஏக்கர் நிலங்கள், மற்ற வசதிகளுடன் சாலை அமைப்பதன் மூலம் வீட்டுத் தளங்களாக மாற்றப்படுகின்றன, இந்த சோதனையில் அங்கீகரிக்கப்பட்ட எதிர் திட்டமிடல் இயக்குனர் B ஒப்புதல் பி.டி.எம்/டி.பி. 5/66 தளவமைப்பு தளம் எண். 7 பின்வரும் எல்லைகளுக்குள் பிணைக்கப்பட்டுள்ளது., **எல்லைகள் :,** வடக்கே: கணபதி சங்கனூர் மெயின் ரோடு, தெற்கில்: தளம் எண் 16, கிழக்கில்: தளம் எண் 8, மேற்கில்: தளம் எண் 6, அளக்கும், கிழக்கு 35.0' மேற்கு 35.0' தெற்கிலும், தெற்கிலிருந்து வடக்கிலும் 83.9' கிழக்கில், தெற்கிலிருந்து வடக்கே 84.3' மேற்கில், 2940 சதுர அடி, (அல்லது) 6 சென்ட் 346 சதுர அடி. அங்கு கட்டப்பட்ட ஒரு RCC கட்டிடத்துடன் கூடிய நிலம் மற்றும் சாலைகளுக்கு மேல் உள்ள உரிமைகள் மற்றும் சாலைகள் மற்றும் பிற அனைத்து அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்துவதற்கான வழக்கமான பாதை எச்சரிக்கைகளுடன். மேலே உள்ள சொத்து கதவு எண்ணில் அமைந்துள்ளது. 240, சொத்து வரி மதிப்பீடு எண். 207080, E.B இணைப்பு எண்.258, நீர் இணைப்பு எண். 70114, சங்கனூர் சாலை, கணபதி போஸ்ட், கோயம்புத்தூர் கார்ப்பரேஷன் லிமிட்ஸ்.

பார்வையிடும் நாள் & நேரம்: 21-நவம்பர்-2023 & 22-நவம்பர்-2023 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

ஏலத் தேதி: 05-டிசம்பர்-2023 காலை 10.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை & ஏலம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 04-டிசம்பர்-2023

விற்பனை இடம்: கதவு.எண்.62,1வது தளம், ஸ்வஸ்தி வளாகம், டாக்டர்.என்ஆர்என் லேஅவுட், நியூ ஸ்கீம் ரோடு, பாப்பநாயக்கன் பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு -641037.

திட்டமிடும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் சொத்துகளை பார்வையிடலாம்.

பொது ஏலம் விதிமுறைகள் & நிபந்தனைகள்:-

1) விற்பனையானது கண்டிப்பாக பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் வழிகாட்டுதல் நடைமுறையின்படி இதன்கீழ் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் & திட்டமிடும் ஏலதாரர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலப்புள்ளி/ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது. 2) சொத்து "உள்ளது உள்ளவிடத்தில்" மற்றும் "உள்ளது உள்ளவாறு" "உள்ளது எதுவோ அது" மேலும் "உதவிசாரா" நிபந்தனையில், வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவை உட்பட விற்பனை செய்யப்படும். 3) ஏலத்திலான சொத்துகளை மேலே குறிப்பிட்ட நாள் & நேரத்தில் பார்வையிடலாம். சொத்துகளை பார்வையிடுதல் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து விசாரணைகளுக்கு, மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்களில் சம்பந்தப்பட்ட இடங்களிலான அதிகாரப்பூர்வ அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். ஆர்வமுள்ள வாங்குவோர் நிர்ணய விலையின் 10% முன்வைப்புத்தொகைக்காக (EMD), "முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்" பெயரில் மும்பையில் மாற்றத்தக்க கேட்பு வரைவோலையுடன் ஒரு முத்திரையிட்ட உறையில் மேற்கூறிய சொத்துக்கான அவர்தம் ஒப்பந்தப்புள்ளிகளை அனுப்பலாம். 4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுடன், திட்டமிடும் ஏலதாரர் வருமானவரித் துறையால் வழங்கப்பட்ட பான் அட்டை மற்றும் ஏலதாரரின் அடையாளச் சான்று மேலும் இருப்பிடச் சான்றின் நகல்பிரதி அதாவது கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஓட்டுனர் உரிமம், ஏனையவை போன்றவற்றின் நகல் ஒன்றையும் இணைக்க வேண்டும். 5) சொத்து நிர்ணய விலைக்கு குறைவாக விற்கப்பட சாத்தியமில்லை. 6) ஏலத்தில் ஆஜராகும் ஏலதாரர்கள் நிர்ணயித்த நிர்ணய விலைக்கு கூடுதலாக ₹10000/- மடங்கில் அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை உயர்த்த அனுமதிக்கப்படுவர். 7) அனைத்து நிலுவைகள் மற்றும் செலவுகள், அதாவது நகராட்சி வரிகள், பராமரிப்பு / சங்கம் கட்டணங்கள், மின்சாரம் மற்றும் குடிநீர் வரிகள் அல்லது ஏதேனும் பிற நிலுவைகள் முத்திரைத்தாள் தீர்வை, பதிவுக் கட்டணங்கள், பெயர்மாற்றம் கட்டணங்கள் உள்ளிட்டவை மேலும் அனைத்து பிற செலவுகள் மற்றும் மேற்கூறிய சொத்துகள் தொடர்பான விற்பனை சான்றிதழ் பதிவுக்கான கட்டணங்கள் அனைத்தும் வெற்றிகர ஏலதாரர்/ கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 8) வெற்றிகர ஏலதாரர்/கொள்முதலாளர் விற்பனை தொடர்பாக அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டதிலிருந்து அடுத்த வேலை நாளுக்குள் இறுதி ஏலத் தொகையின் 25% (ஏற்கனவே செலுத்திய 10% முன்வைப்புத்தொகை சரிகட்டலுக்கு பிந்தையது) தொகையை செலுத்த வேண்டும், தவறினால், முன்வைப்புத்தொகை கைக்கொள்ளப்படும். 9) விற்பனை விலையின் மீதி 75% ஆனது அதிகாரப்பூர்வ அதிகாரியால் வெற்றிகர கொள்முதலாளருக்கு விற்பனை ஒப்புதல் தெரிவிக்கப்பட்டதன் 15 நாட்களுக்குள் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியால் மேலும் தனி விருப்ப உரிமையில் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்ட இவ்வித நீட்டிக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும். 10) அதிகாரப்பூர்வ அதிகாரி அவருடைய விருப்ப உரிமையில், முன்னறிவிப்புமின்றி, விற்பனைக்கான இந்த அறிவிப்பின் ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உரிமை கொண்டிருக்கிறார். 11) ஒருவேளை, கடனீட்டுக் கடனீந்தோருக்கு ஏற்பட்ட அனைத்து செலவு, கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து அனைத்து நிலுவைகளும் மேற்கூறிய பெயரிலான கடன்தாரர் / உப-கடன்தாரர் மூலம் ஏலத் தேதிக்கு ஒரு வேலை நாள் முன்பு வரைக்குள்ளாக செலுத்தப்பட்டு விட்டால் பிறகு சொத்து விற்பனை செய்யப்படாது மேலும் எதிர்நோக்கும் ஏலதாரர்களிமிருந்து பெறப்பட்ட அனைத்து ஏலப்புள்ளிகளும் M/S. முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்கு எதிராக ஏதேனும் பொறுப்பு / கோருரிமையின்றி அவர்களுக்கு திருப்பி அனுப்பப்படும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து மேற்குறிப்பிட்ட தேதிகளுக்குள் நாளது தேதி வரையான வட்டி மற்றும் செலவினங்களுடன் மேற்குறிப்பிட்டவாறு கடன்பொறுப்பை முழுமையாக தீர்க்குமாறு மேலும் நிலுவைகளை செலுத்துமாறு பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டத்தின் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) & 9 கீழ் சட்டப்பூர்வ 30 நாட்கள் அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது தவறினால் கடனீட்டுச் சொத்து மேற்குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனை செய்யப்படும். கடன்தாரர்/கள் 30 நாட்கள காலத்திற்குள் சொத்து இடத்திலிருந்து அவர்தம் உரிமையளிக்கப்படாதப் பொருட்களை அகற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் இல்லையெனில் அது அவர்தம் பொறுப்பு மற்றும் செலவில் சொத்து இடத்திலிருந்து அகற்றப்படும்.

இடம்: தமிழ்நாடு, தேதி :01-நவம்பர்-2023

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, முத்தூட் வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடுக்காக

LIC HFL
LIC HOUSING FINANCE LTD

எல்.ஐ.சி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

டிரைஸ்டார் டவர்ஸ், 2-ம் தளம், 657, அவினாசி சாலை, கோயமுத்தூர் 641037. போன் : 0422 2220358

2002–ஆம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் அமலாக்கச் சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ்

கேட்பு அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர், உபகடன்தாரர், உத்திரவாததாரர் தங்களுக்குச் சொந்தமான கீழ் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை எல்.ஐ.சி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் அடமானம் வைத்து கடன்பெற்று ஒப்புக் கொண்ட தொகையுடன் இணைந்த வட்டித் தொகையினை செலுத்தத் தவறிய காரணத்தால் நிறுவனத்தின் விதிமுறைகளின்படி **NPA-**ஆக வரையறுக்கப்பட்டு, 2002–ஆம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் அமலாக்கச் சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் தனித்தனியே கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் கேட்பு அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டது. கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/கள், உபகடன்தாரர்/கள், உத்திரவாததாரர்/கள் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை குறித்த விபரங்கள் அதில் கூறப்பட்டுள்ளது.

கடன் கணக்கு எண் : 530500006711

கடன்தாரர்கள் பெயர் & முகவரி : திரு.C.G.ஆண்டனி (கடன் பெற்றவர்), த/பெ.திரு.ஜார்ஜ், 2-A, BOI காலனி, கோவைப்புதூர், கோயம்புத்தூர் – 641042. **திரு.A.ஜார்ஜ் (இணைந்து கடன் பெற்றவர்), த/பெ.திரு.ஆண்டனி,** 2-A, BOI காலனி, கோவைப்புதூர், கோயம்புத்தூர் – 641042

கேட்பு அறிவிப்பு தேதி	கேட்பு அறிவிப்பின்படி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை	NPA தேதி
19.10.2023	**ரூ.93,78,693.11** மற்றும் 20.10.2023–ல் இருந்து செலுத்தும் தேதி வரையிலான ஒப்பந்தப்படி வட்டியும், இதர கட்டணங்களும்	**10.06.2023**

அடமானச் சொத்து விபரம் : கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் சார்பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுக்கா, சங்கனூர் கிராமம், SF.No.440, 434/1 & 439 பாகம், ராமசாமி நகர் 2. மேற்கண்ட சொத்து மற்றும் முன்மொழியப்பட்ட கட்டுமானம் ஆகியன கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் அங்கீகார எண். 263/02/H8–ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் சைட் எண்.32 ஆனது 2720 சதுரடி அல்லது 6 செண்ட் மற்றும் 107 சதுரடி அளவில் பின்வரும் எல்லைகள் மற்றும் அளவுகளில் அமைந்துள்ளது. வடக்கு : 30 அடி அகலமுள்ள கிழமேல் சாலை, கிழக்கு : SF No.478, தெற்கு : சைட் எண்.33, மேற்கு : 30 அடி அகலமுள்ள தென்வடல் சாலை. அளவுகள், கிழமேலாக வடக்கில் 68 அடி, கிழமேலாக தெற்கில் 68 அடி, தென்வடலாக கிழக்கில் 40 அடி, தென்வடலாக மேற்கில் 40 அடி. மேலும் அங்கு கட்டப்பட்டுள்ள RCC கட்டிடம் மற்றும் அதற்குரிய ஏனைய அனைத்து அனுபந்தங்கள் சகிதம்.

மேற்குறிப்பிட்ட கடன் தொகையினை திருப்பிச் செலுத்த தவறியவர்கள் மேற்படி நாள் முதல் 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். தவறும்பட்சத்தில் தாங்கள் மேற்படி நிறுவனத்தில் அடமானம் வைத்துள்ள பிணையச் சொத்தினை **2002–ஆம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் அமலாக்கச் சட்டத்தின் பிரிவின் கீழும் மற்றும் இந்திய அரசின் 10.11.2003 தேதியிட்ட சிறப்பு அரசிதழில் உள்ள அறிவிப்பின்படியும்** சுவாதீனம் எடுக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது. எல்.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், அவ்வாறு சுவாதீனம் எடுக்கும் அடமானச் சொத்தின் பகுதியினையோ முழுவதுமோ குத்தகை, விற்பனை மற்றும் அதன் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் மற்றும் நிர்வாகத்தை எடுத்துக் கொண்ட பின்னர் பராமரிப்பதற்கு ஆட்களை நியமித்தல் ஆகிய மாற்றல் உரிமையினை பெற்றுள்ளது. அடமானச் சொத்தினை முழுவதுமாகவோ, பகுதியாகவோ யாராவது கையகப்படுத்தியிருந்தால் அவருக்கும் அறிவிப்பு செய்து அவர் மற்றும் யாரேனும் கடன்தாரர்களுக்குப் பணம் செலுத்த வேண்டியிருந்தால் செலுத்த வேண்டிய பணத்தை எல்.ஐ.சி.ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் எழுத்துப்பூர்வ நோட்டீஸ் மூலம் பெறப்பட்டு கடன் தொகைக்கு சரி செய்து கொள்ளும் உரிமையும் நிறுவனத்திற்கு உண்டு. மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13)–ன் படி கடன்தாரர்/கள் மேற்படி சொத்தின் உரிமை மற்றும் உடமை மாற்றம், விற்பனை, குத்தகை போன்ற வகைகளில் எல்.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் முன் அனுமதியின்றி செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அடமானச் சொத்தின் விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகை, கடன் தொகைக்கு ஈடாகாத பட்சத்தில் கடன்தாரர்/கள், உபகடன்தாரர்/கள், உத்திரவாததாரர்/கள் மேல் தனிப்பட்ட முறையில் பாக்கித் தொகையினை எல்.ஐ.சி ஹவுசிங் பைனான்ஸ் வசூல் செய்ய மேற்படி சட்டத்தின் மூலம் அதிகாரம் உள்ளது. மேலும் பிணையச்சொத்தினை சுவாதீனம் எடுத்தல், ஏலத்தில் விற்பனை செய்தல் போன்றவற்றுக்கு உண்டாகும் செலவுகளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தாங்களே பொறுப்பு.

குறிப்பு : 2002–ஆம் வருடத்திய பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்கள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் அமலாக்கச் சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பு பட்டுவாடா ஆகாமல் திரும்பியதால் பிரசுரிக்கப்படுகிறது.

தேதி : 19.10.2023
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்.ஐ.சி.ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்